கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (டிசெம்பர் 2017)

# SAS 4223 Post Structuralism and Post modernism

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து மூன்று வினாக்களையும் பகுதி-II இல் இருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) கட்டமைப்பு வாதத்தினை பின் கட்டமைப்பு வாதம் நிராகரிக்கு மாற்றினை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) "சசூர் (Saussure) குறிப்பிடும் குறிப்பானுக்கும் (Signifier) குறிப்பீட்டுக்குமான (Signefied) தொடர்பை விளங்குவதனூடாக மொழிக் கட்டமைப்பை விளங்கிக் கொள்ளலாம்." தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)

02. (அ) அதிகாரம், அசமத்துவம் பற்றி பூ.்.க்கோ (Foucault) குறிப்பிடும் கருத்துக்களை உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) பின்நவீனத்துவ சிந்தனைகள் நவீனத்துவச் சிந்தனைகளிலிருந்து வேறுபடுமாற்றினை அறிஞர்களின் கருத்துக்களின் துணையுடன் விளக்குக.

(13 புள்ளிகள்)

03. (அ) லெவிஸ்ராஸ் (Levi Strauss) குறிப்பிடும் கட்டமைப்புசார் கருத்துக்கள் பண்பாட்டு மானுடவியல் விடயங்களை விஞ்ஞான ரீதியாக விளங்கிக்கொள்ள உதவுமாற்றினை தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

(ஆ) 'ஒரு விடயத்தை விளங்கிக்கொள்வதற்கு அறிவு முக்கிய காரணியாக செயற்படுகின்றது' பின்கட்டமைப்பியல் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக?

(13 புள்ளிகள்)

04. (அ) "பித்து நிலையும் நாகரீகமும்" எனும் நூலில் குறிப்பிடப்படும் விடயங்களைத் தொகுத்துக்கூறி நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) பதுரில்லாத் குறிப்பிடும் ஊடகங்கள் மூலம் போலியான விடயங்கள் யதார்த்தத்திற்குப் புறம்பாக எவ்வாறு செயற்படுகின்றன என்பதனைத் தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)

## பகுதி – II

05. கட்டவிழ்ப்பு வாதத்தின் தோற்றக் காரணிகளைக் குறிப்பிட்டு தெரிதா (Derrida) முன்வைக்கும் க ருத்துக்களையும் முன்மொழியும் விடயங்களையும் அவர்மீதான விமர்சனங்களையும் மதிப்பிடுக.

(25 புள்ளிகள்)

06. லக்கான் (Lacan) குறிப்பிடும் நனவிலிக் கட்டமைப்பு பேச்சிலும் மொழியிலும் எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை அவரின் பின் கட்டமைப்புவாதக் கருத்துக்களை மையமாகக் கொண்டு விமர்சன ரீதியில் ஆராய்க?

(25 புள்ளிகள்)

*****